## 2018ஆம் வருடம் அக்டோபர் மாதம் 15.10.2018ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு. வே. கிருஷ்ணகுமார், டி.சி.இ.,**
**நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் செப்டம்பர் 2018ம் மாத நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 2**

**01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு இறுதி அறிக்கை**

தமிழக அரசின் அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர் நாள் 20.08.2018ம் தேதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படியும் தருமபுரி நகராட்சி நகர் மன்றத்தின் 10.09.2018ம் தேதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படியும் தருமபுரி நகராட்சி நகர் மன்றத்தின் 10.09.2018ம் தேதிய தீர்மான எண்.508ல் தற்போதுள்ள சொத்து வரியில் குடியிருப்பு கட்டிடத்திற்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் 01.04.2018 முதல் சொத்து வரி உயர்வு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமலில் உள்ள மண்டல அடிப்படை மதிப்பினை இந்நகர் மன்ற தீர்மானத்தில் எண்.508 நாள் 10.09.2018ன் படி சொத்துவரி கீழ்வருமாறு உயர்வு செய்வதை பொது மக்களின் தகவலுக்காக 12.09.2018ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் தக்க காரணங்களுடனும் எழுத்து பூர்வமாக வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

மண்டல மதிப்பீடு

சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு

| வ.எண் | தற்போதைய மண்டல | உயர்த்தப்பட்ட மதிப்பு |
|---|---|---|
| 1 | A - 1.50 | A - 2.25 |
| 2 | B - 1.25 | B - 1.90 |
| 3 | C - 0.80 | C - 1.20 |

தருமபுரி நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள் / சாலைகள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிபினை மேற்படி உள்ளவாறு உயர்வு செய்யவும், அதன் அடிப்படையில் சொத்துவரி பொது சீராய்வு செய்யவும் மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு தருமபுரி நகராட்சி பகுதியிலுள்ள 359 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**A, B மற்றும் C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்**

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A | 44 |
| 2 | B | 127 |
| 3 | C | 188 |
| | மொத்தம் | 359 |

சொத்துவரி உயர்வு செய்வது தொடர்பாக இரண்டு ஆட்சேபனை மட்டும் பெறப்பட்டது. மேற்கண்ட மனுதாரர்களுக்கு பதிலறிக்கை பதிவஞ்சலில் சார்பு செய்யப்பட்டு ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி உயர்த்தப்பட்ட மண்டல மதிப்பீடு அடிப்படையில் A,B,C மண்டலங்களுக்கு சொத்துவரி சீராய்வு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாகன முன்பணம் மற்றும் கணினி முன் பணம் வழங்குமாறும் கீழ்கண்ட பணியாளர்கள் விண்ணப்பித்துள்ளனர். அரசு ஆணை எண் 919 நிதித்துறை நாள் 13.10.1993 மற்றும் 485 நிதித்துறை நாள் 13.01.2005, 469 (சம்பளம்) துறை நாள் 22.09.2009ன் படி வாகன முன்பணம் வழங்கவும் 9% வட்டியினையும் சேர்த்து 50% தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மற்றும் அரசு ஆணை எண் 186 நிதி (L&A) துறை நாள் 08.07.2014ன் படி கணிப்பொறி முன்பணம் வழங்கவும் 10% வட்டியுடன் சேர்த்து 50% தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு.பரமேஸ்வரன் | துப்புரவு பணியாளர் | வாகன முன்பணம் | 71303 |
| 2. | திரு.செ. பிரகாஷ் | இளநிலை உதவியாளர் | கணினி முன்பணம் | 50000 |
| 3. | திரு.ஆறுமுகம் | அலுவலக உதவியாளர் | வாகன முன்பணம் | 65178 |
| 4. | திரு.பி. உமாபதி | துப்புரவு பணியாளர் | வாகன முன்பணம் | 65533 |
| 5. | திரு.தண்டபாணி | மேல்நிலை நீ.க. | வாகன முன்பணம் | 75000 |
| 6. | திரு.தவமணி | பணி மேற்பார்வையாளர் | வாகன முன்பணம் | 75000 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண் : 4**

திரு. பி. நடேசன் த/பெ. பெரியாக் கவுண்டர் என்பவருக்கு கவி.எண்.45/2018/எப்1 நாள் 27.07.2018ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. கட்டிட அனுமதி வழங்கப்பட்ட இடத்தில் இருந்த பழைய கட்டிடத்திற்கு ஏற்கெனவே பாதாள சாக்கடை இணைப்பு முன்வைப்பு தொகை ரூ.5000/– செலுத்தி பெற்றுள்ளார் (ரசீது எண் 00829 நாள் 30.11.2009) கட்டிட அனுமதி பெறும் போது தவருதலாக ரசீது எண் 05746 நாள் 16.07.2018ல் செலுத்தியுள்ள ரூ.6000/–ஐ திருப்பி வழங்க கோரியுள்ள மனுதாரரின் கோரிக்கையை ஏற்று ரூ.6000/– திரு.நடேசன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 5**

திருமதி. இ. மீனா க/பெ. டி.சி. இளங்கோவன் என்பவருக்கு க.வி.எண்.52/2018/எப்1 நாள் 27.07.2018ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. கட்டிட அனுமதி கட்டணம் செலுத்தும் போது பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் ரூ.8000/– ரசீது எண்.06571 நாள் 25.07.2018ல் செலுத்தியுள்ளார். இதே மனைக்கு ரசீது எண்.1650175 நாள் 11.05.2016ல் செலுத்தியுள்ளார். ஒரே மனைக்கு தவறுதலாக இரண்டு முறை ரூ.8000/– வீதம் செலுத்தப்பட்டு விட்டதால் தவறுதலாக செலுத்திய தொகை ரூ.8000/– திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 6**

திரு. டி.சி. இளங்கோவன் த/பெ. சின்னசாமி என்பவருக்கு க.வி.எண்.51/2018/எப்1 நாள் 27.07.2018ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. கட்டிட அனுமதி வழங்க கோரி செலுத்தப்பட்ட கட்டணத்துடன் பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் சேர்த்து ரசீது எண் 06572 நாள் 25.07.2018ல் செலுத்தி உள்ளார். இதே மனைக்கு ரசீது எண்.1650174 நாள் 11.05.2016ல் ரூ.8000/– செலுத்தி உள்ளார். ஒரே மனைக்கு இறுமுறை தவறுதலாக ரூ.8000/– வீதம் செலுத்தப்பட்டு உள்ளதால் மனுதாரரின் கோரிக்கைபடி 25.07.2018ல் செலுத்தியுள்ள ரூ.8000/– திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

தருமபுரி நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் லாரி TDD 0081 ஓட்டுனர் அவர்கள் லாரி அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு இயக்க முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது, எனவே பழுதுகளை நீக்கி நான்கு வீல் டயர் புதியதாக மாற்றி தருமாறு கோரியதின் பெயரில், உதவி பொறியாளர் அவர்கள் வாகனத்தினை ஆய்வு செய்து 19.09.2018 குறிப்பில் மேற்கண்ட பணிகள் செய்ய தோரய செலவினம் ரூ4.90லட்சம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டதின் பெயரில், 21.09.2018 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1).Lakshmi Auto Diesel Works Mettur Dam | - | Rs.4,89,965.00 |
| 2).Auto Diesel Works | - | Rs.5,29,600.00 |
| 3).Sri Ganpathy Motor Works | - | Rs.5,31,760.00 |
| 4).Sri Jothimurugan Motor Works | - | Rs.5,14,200.00 |

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண் 1ல் கண்ட Lakshmi Auto Diesel Works Mettur Dam அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சிக்கு துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தடங்கம் உரகிடங்கில் உள்ள பழைய குப்பைகளை அகற்றவும், குப்பை தொட்டி மற்றும் பேட்டரி வாகனம் வாங்க ரூ.636.04 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்கண்ட பணிகள் செய்ய ஒப்பந்தப் புள்ளியினை கோர மாநில அளவில் தமிழ் நாளிதழிலும் தென் மாநில அளவில் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யத வகையில் விளம்பர கட்டணம் ரூ.96,076/ஐ Bright Advertisingக்கு வழங்கவும் மற்றும் இந்நகராட்சியின் ஓராண்டு சாதனை தொடர்பாக மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ9975/– செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1). Bright Advertising - Rs.93,076.00

2). மாலை மலர் நாளிதழில் - RS. 9,975.00

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 9**

இந்நகராட்சியில் பணிபுரியும் வரும் பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் 151 நபர்களுக்கு 2018-2019ம் ஆண்டிற்கான கை கழுவும் சோப்பு வழங்க வேண்டியுள்ளது. பணியாளர்களுக்கு வழங்கும் லை பாய் சோப்பு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தருமபுரி மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட் மூலம் வாங்கி வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.60,000/-ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 10**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள், அலுவலக உதவியாளர்கள், மின் பணி உதவியாளர்கள், டேங்க் வாட்ச்மேன்கள், இரவு காவலர், மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் ஆயா ஆகியோருக்கு 2018-2019ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது. சீருடைகள் மற்றும் தையல் கூலி வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.6,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 11**

தருமபுரி நகராட்சி பொறியாளர் பிரிவில் இயங்கும் வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு செலுத்தப்பட வேண்டியிருப்பதால் கீழ்கண்ட வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு ரூ1,13,610/ஐ லெுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). TN29AM7747- Rs.21,957.00
2). TN29AP4870 - Rs.57,316.00
3). TDD0081 - Rs.34,337.00

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்
2). அவசர அவசியம் கருதி தனி அலுவவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 12**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள் கடித ந.க.எண்.653/2014/ஆர்4 நள்20.09.2018ல் தருமபுரி நகராட்சி வார்டு எண் 33, அன்னசாகரம் கொடிகொட்டாய் ஆறுமுகம், அர்சுணன் வீடு பகுதியில் 30,000 லிட்டர் தேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லையின் அமைத்தல் பணிக்கு ரூ4.65 லட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தூய்மையே சேவை சிறப்பு பணிகள் மேற்கொள்ள தூய்மை ரதம் ஒன்று வடிவமைக்கவும், நகரின் பிரதான பகுதிகளில் Flex Bannerகள் வைக்கவும், உறுதிமொழி பேனர்கள் அமைத்தல், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அச்சிடும் பணிக்கு நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைப்புள்ளி கோரியதில் 15.09.2017ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | கே. முழுமதி | Rs.74,970/- |
| 2. | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன் | Rs.78,241/- |
| 3. | ஆர். மங்கை | Rs.79,500/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள கே. முழுமதி நகராட்சி ஒப்பந்ததாரர், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 14**

இந்நகராட்சிக்கு நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் அமைக்கும் பணி Bio Mining குடிநீர் இணைப்புகள் (அனைத்து வீடுகளுக்கு) மற்றும் இதர திட்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளை நகல் எடுத்து பைண்டிங் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் இப்பணியினை அவசர அவசியம் ககதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி. கே. முழுமதி அவர்கள் மூலம் மேற்கொண்டமைக்கு தொகை ரூ.6225/—ஐ வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 15**

தருமபுரி நகராட்சியின் 2017—2018ம் ஆண்டு தணிக்கை 11.06.2018 முதல் தொடங்கப்பட்டுள்ளதால் தணிக்கைக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கி வழங்க கோரியதால் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி. கே. முழுமதி அவர்கள் மூலம் வாங்கியமைக்கு தொகை ரூ.3315/—ஐ வழங்கிய மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 16**

அரசு ஆணை எண் 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2019ன்படி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஏற்படும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மானம் 125 நாள் 30.06.2017ல் ரூ.20000/—ற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொண்டபோது கூடுதலாக செலவினம் ஆகியுள்ளதால் இப்பணிக்கு கூடுதலாக தொகை ரூ.40000/—ற்கு, மன்றத்தின் அனுமதிக்கும் நிர்வாக நலன்கள் கருதியும் அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.கே.முழுமதி அவர்கள் மூலம் நகராட்சி சட்டவிதி 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு பட்டியல்படி தொகை ரூ.48370/— வழங்கவும் மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர் (பொ)**
தருமபுரி நகராட்சி.

**2018ஆம் வருடம் அக்டோபர் மாதம் 15.10.2018ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 | 526 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 2 முதல் 16 வரை | 527 முதல் 541 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.

## 2018ஆம் வருடம் அக்டோபர் மாதம் 31.10.2018ம் நாள் புதன் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

### முன்னிலை : திரு. வே. கிருஷ்ணகுமார், டி.சி.இ., நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)

**பொருள் எண் : 1**

தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான நகர் மற்றும் புறநகர் பேருந்து நிலையங்களில் உள்ள கடைகளின் மேல் கூரை மீது விளம்பர பலகை வைக்க அனுமதி வழங்குமாறு SBM மீடியா சென்னை நிறுவனத்தார் 05.10.2018ம் தேதி கடிதத்தில் கேட்டுள்ளார்கள். நகராட்சியின் வருவாய் கருத்தில் கொண்டு நகராட்சி கட்டிடங்களில் விளம்பர பலகைகள் வைக்க கட்டணம் நிர்ணயம் செய்து நகர் மன்ற தீர்மானம் எண்.363 நாள் 25.09.1998ல் அனுமதி பெறப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார் 6 விளம்பர பலகைகள் கீழ்காணும் விபரப்படியான இடங்களில் நிபந்தனைக்கு உட்படுத்தி 01.11.2018 முதல் 31.10.2021 வரை நிபந்தனைகளுக்கு உட்படுத்தி வைத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. முகமது அலி கிளப் ரோடு பழனிசாமி கடை மேல்பகுதி மேற்கு பார்த்த திசையில் 15’x6’ அளவில் 1 எண்ணிக்கை
2. நகர பேருந்து நிலையம் கடை எண் 17ன் மேற்கூரை வடக்கு பார்த்த திசையில் 15”x10”அளவில் 1 எண்ணிக்கை
3. நகர பேருந்து நிலையம் மணி கூண்டின் சுவற்றில் மேற்கு பார்த்த திசையில் 8”x10” அளவில் 1 எண்ணிக்கை
4. புறநகர் பேருந்து நிலையம் கடை எண் 8ல் என்.ரவி குத்தகை தாரர் கடையின் மேற்கூறை தெற்கு பார்த்த திசையில் 15”x10” அளவில் 1 எண்ணிக்கை
5. புறநகர் பேருந்து நிலையம் பெண்கள் பாலுட்டும் அறையின் மேற்கூறை தென் மேற்கு திசையில் 15”x10” அளவில் 1 எண்ணிக்கை
6. புறநகர் பேருந்து நிலையம் காலி மனை கடை எண்.4ன் தென் மேற்கு திசையில் 15”x10” அளவில் 1 எண்ணிக்கை

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 2**

தருமபுரி நகராட்சி நகரமைப்பு பிரிவுக்கு **2019**ம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்ற தேர்தல் மற்றும் தேர்தல் பணிகளுக்கு அதிக எண்ணிக்கையில் ஜெராக்ஸ் எடுக்க வேண்டியிருப்பதால் புதிய ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கி வழங்க கோரியதின் பெயரில் **22.10.2018** அன்ற வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீர்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கம் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. SR Systems, Salem Rs.1,45,199.00/-
2. Golden Eye, Salem Rs.1,51,630.00/-
3. SM Cellular, Salem Rs.1,52,692.00/-

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண் 1ல் கண்ட SR Systems, Salem அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர் (பொ)**
தருமபுரி நகராட்சி.

**2018ஆம் வருடம் அக்டோபர் மாதம் 131.10.2018ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 2 வரை | 542 முதல் 543 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.